செ.வெ.எண்.308 நாள்.14.05.2018.

திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில், தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் மற்றும் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம் இணைந்து இளைஞர்களுக்கான திறன்பயிற்சி குறித்த விழிப்புணர்வு குறும்படத்தினை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் தொடங்கி வைத்து, பார்வையிட்டார்.

--------

திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில், தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் மற்றும் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம் இணைந்து இளைஞர்களுக்கான திறன்பயிற்சி குறித்த விழிப்புணர்வு குறும்படம் இன்று (14.05.2018) வெளியிடப்பட்டது. இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் கலந்து கொண்டு, இளைஞர்களுக்கான திறன்பயிற்சி குறித்த விழிப்புணர்வு குறும்படத்தினை தொடங்கி வைத்து, பார்வையிட்டார்.

தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் தமிழ்நாட்டின் இளைஞர்கள் வேலைவாய்ப்பினை பெறுவதற்கு திறன் பயிற்சிகளை இலவசமாக வழங்கி வருகிறது. தமிழகத்தை திறன்மிகு தமிழகமாக உருவாக்க வேண்டும் என்ற தொலைநோக்கு திட்டத்துடனும், அதற்கேற்ப தமிழகத்தினை இந்திய நாட்டின் திறன் மையமாக மாற்ற வேண்டும் என்ற இலக்குடனும் இளைஞர்களுக்கு உரிய திறன் பயிற்சி வழங்கிட வேண்டி, தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் உருவாக்கப்பட்டுள்ளது. இன்றைய தொழில் நிறுவனங்களில் இளைஞர்கள் வேலைவாய்ப்பு பெறுவதற்கு ஏற்ற உரிய திறன் பயிற்சிகளை வழங்கி வருகிறது. மத்திய, மாநில அளவிலான பல்வேறு அரசு துறைகளுடன் இணைந்து, முக்கிய தொழில் நிறுவனங்கள் வழியாக 20க்கும் மேற்பட்ட துறைகளில் 400க்கும் அதிகமான பிரிவுகளில் குறுகிய கால திறன் பயிற்சியினை இலவசமாக வழங்கி வருகிறது.

திருநெல்வேலி மாவட்டத்தில் அரசினர் தொழிற்பயிற்சி நிலையங்கள் உள்பட 13 அங்கீகரிக்கப்பட்ட திறன் பயிற்சி வழங்கும் நிறுவனங்கள், ஆட்டோ மொபைல், கட்டுமானம், இலகு பொறியியல், தொலை தொடர்பு, ஊடகம், விருந்தோம்பல், கால்நடைத்துறை, மென் திறன் பயிற்சி, பிளாஸ்டிக் மற்றும் இராசயனத்துறை, தகவல் தொழில்நுட்பத் துறை போன்ற 21 துறைகளில் திறன் பயிற்சிகளை இலவசமாக வழங்கி வருகிறது. திருநெல்வேலி மாவட்டத்தில் திறன் பயிற்சிகளை கண்காணிக்கவும், மேம்படுத்தவும் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தலைமையில் அந்தந்த மாவட்ட அரசினர் தொழில் பயிற்சி நிலைய முதல்வர் ஒருங்கிணைப்பாளராகவும், சம்மந்தப்பட்ட மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர் உறுப்பினராக கொண்டு குழு அமைக்கப்பட்டுள்ளது.

தற்போது கிராமப்புற மற்றும் நகர்ப்புற இளைஞர்கள் அதிகளவில் வேலைவாய்ப்பை பெறும் பொருட்டு திறன் பயிற்சி குறித்த விழிப்புணர்வை அவர்கள் இருக்கும் இடத்திற்கே சென்று ஏற்படுத்தும் வண்ணம் செய்தி மக்கள் தொடர்புத் துறையின் LED வாகனம் மூலம் திறன் விழிப்புணர்வு ஏற்படுத்தப்படவுள்ளது. இந்த LED வாகனம் மூலம் திறன் பயிற்சி குறித்த விவரங்கள், விளக்க படங்கள், இளைஞர்களை திறன் பயிற்சிக்கு பதிவு செய்தல், விழிப்புணர்வு வரைபடங்கள் போன்றவை மின்னணு விளம்பர திரையின் மூலம் இளைஞர்களுக்கு காண்பிக்கப்படும்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட வருவாய் அலுவலர் திரு.பூ.முத்துராமலிங்கம், மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர் (பொ) திரு.மரியசகாய அந்தோணி, பேட்டை அரசினர் தொழிற் பயிற்சி நிலைய முதல்வர் திரு.வா.வேல்முருகன், இளைநிலை வேலைவாய்ப்பு அலுவலர் திரு.சண்முகவேல் மற்றும் தொழிற்பயிற்சி பள்ளி நிறுவனர்கள் திரு.சுப்பையாபாண்டியன், திரு.மாரீஸ், திரு.நாகேஷ் உள்பட அரசு அலுவலர்கள், பள்ளி மாணவர்கள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

வெளியிடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி.